**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 112/2018**

**Deposition of Witness for : PW 5**

**Name** : திரு. பாண்டுரங்கன்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18-04-2023.**

**(A1 to A3 present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது நாரியமங்கலத்தில் வசித்து வருகிறேன். எதிரிகளை தெரியும். இறந்து போன செல்வத்தை தெரியும். இறந்த போன செல்வமும், 1ம் எதிரியும் அண்ணன் தம்பிகள். அவர்கள் இருவருக்குமே நிலப்பிரச்சனை இருந்து வந்தது. சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்னர் செல்வம் இறந்து விட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பமும் என்னுடையதுதான். அந்த கையெழுத்துக்களை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். அந்த கையெழுத்துக்கள் முறையே அ.சா.ஆ. 4 மற்றும் 5. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. 1ம் எதிரி என்னுடைய தூரத்து சொந்தக்காரர்.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

27.5.2016ந் தேதி மாலை 7 மணியளவில் செல்வத்திற்கும் 1ம் எதிரிக்கும் இடையே நிலத்தகராறு ஏற்பட்டது என்று கேள்வி பட்டேன் என்றும், 28.5.2016 ந் தேதி காலை 10 மணிக்கு சம்பவ இடத்தில் நானும், எங்கள் ஊர் ஏழுமலையும் நின்று கொண்டிருந்தோம் என்றும், அப்போது கீழ்பென்னாத்தூர் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், மேலும் சம்பவ இடத்தில் இருந்த சாதாரண சிமெண்ட் காரை, ரத்தம் தோய்ந்த சிமெண்ட் காரை ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் நானும், ஏழுமலையும் கையெழுத்து இட்டோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது

எதிரிகள் எங்கள் உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

பொன்னு சாமி என்ன உறவோ, அதே உறவு தான் இறந்து போன செல்வமும் ஆவார். என்னிடம் காவல் நிலையத்தில் கையெழுத்து வாங்கினார்கள்.

ஒம்/- பாண்டுரங்கன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.